இந்தியத் தூதரகம்
கோலாலம்பூர், மலேசியா

# செய்தி அறிக்கை

## 2017-18ஆம் ஆண்டிற்கான புலம்பெயர்ந்த இந்திய மாணவர்களுக்கான கல்வி உபகார சம்பளம் (SPDC) அக்டோபர் 31, 2017 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது

இந்திய அரசாங்கம், இந்தியாவில் இளங்கலை கல்வி மேற்கொள்ள விரும்பும் புலம் பெயர்ந்த இந்திய வம்சாவளி நபர்கள் (PIOs), வெளிநாடு வாழ் இந்தியர்கள் (NRIs) மற்றும் மலேசியாவில் பணி புரியும் இந்திய நாட்டவர்களின் பிள்ளைகளுக்கு 2017-18ஆம் ஆண்டிற்கான கல்வி உதவித்தொகை **அக்டோபர்** 31, 2017 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. **மருத்துவம் தொடர்பான பிற கல்விகளுக்கு இந்த** கல்வி **உதவித்தொகை வழங்கப்படாது.**

**தகுதி :**

17 முதல் 21 வயதுக்கு உட்பட்டவர்கள் இந்த கல்வி உதவித்தொகைக்கு (அக்டோபர் 1, 2017 அன்று) விண்ணப்பிக்கலாம். அக்டோபர் 1, 1996-க்குப் பின் மற்றும் அக்டோபர் 1, 2000-க்கு முன் பிறந்தவர்கள் மட்டுமே இந்த உதவித்தொகை விண்ணப்பத்திற்குத் தகுதியானவர்கள்.

இந்திய வம்சாவளி (PIOs) விண்ணப்பதாரர்கள் அவர்களின் PIO அல்லது OCI அட்டையை ஆதாரமாக சமர்ப்பிக்க வேண்டும். இத்தகைய ஆவணங்கள் இல்லாத பட்சத்தில் விண்ணப்பதாரர்கள் தாங்கள் ஒரு இந்திய வம்சாவளி நபர் என்ற உறுதிமொழியைப் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் சமர்ப்பிக்க வேண்டும். இந்த ஆவணங்கள் யாவும் இந்தியத் தூதரகத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

வெளிநாடு வாழ் இந்தியர்கள் (NRIs) கடந்த 6 வருடங்களில் வெளிநாட்டில் (66 நாடுகளில் ஏதேனில் ஒன்றில்) சுமார் 3 வருடங்கள் கல்வியை மேற்கொண்டிருக்க வேண்டும். மேலும், வெளிநாட்டு தகுதி (11&12ஆம் வகுப்பு அல்லது அதற்கு சம மதிப்புள்ள) தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அதோடு விண்ணப்பதாரர்கள், தங்களது பெற்றோர்கள் கடந்த 2 வருடமாக அயல் நாட்டில் வேலை செய்து வருகிறார்கள் என்ற ஒரு உறுதிமொழி பத்திரத்தை (இந்தியத் தூதரகத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும்) சமர்ப்பிக்க வேண்டும்.

இந்திய நாட்டவர்களின் பிள்ளைகள், கடந்த 6 வருடங்களில் சுமார் 3 வருடங்கள் வெளிநாட்டில் தங்களது கல்வியை மேற்கொண்டிருக்க வேண்டும். மேலும், வெளிநாட்டு தகுதி (11&12ஆம் வகுப்பு அல்லது அதற்கு சம மதிப்புள்ள) தேர்வுகளிலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள், தங்களது பெற்றோர்கள் கடந்த 2 வருடமாக அயல் நாட்டில் வேலை செய்து வருகிறார்கள் என்ற ஒரு உறுதிமொழி பத்திரத்தைச்

(இந்தியத் தூதரகத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும்) சமர்ப்பிக்க வேண்டும். பெற்றோர்களின் வேலை அனுமதிப் பத்திரத்தின் நகலையும் (இந்தியத் தூதரகத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும்) உடன் சமர்ப்பிக்க வேண்டும்.

**கல்வி தகுதிகள்:**

விண்ணப்பதாரர்கள், 12-ஆம் வகுப்பு அல்லது அதற்கு சம மதிப்புள்ள; அதாவது இந்திய பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி தேர்வுகளில் 60 விழுக்காடு மதிப்பெண் பெற்ற மாணவர்கள் மட்டுமே இவ்விண்ணப்பத்திற்குத் தகுதியானவர்கள்.

**வருமான தகுதிகள்**

இந்திய வம்சாவளி (PIO) மற்றும் வெளிநாடு வாழ் இந்தியர்களின் (NRI) பெற்றோர்களின் மாதச் சம்பளம் US$ 2,250 சம மதிப்புள்ள அல்லது அதற்கு மேற்போகாமல் இருக்க வேண்டும். இந்தியத் தூதரகத்தால் அங்கீகரிக்கப்பட்ட முதலாளிமார்கள் கையொப்பமிட்ட மாதச் சம்பளத்தின் சான்றிதழும், வருடாந்திர வருமான வரி சான்றிதழையும் உடன் சமர்ப்பிக்க வேண்டும்.

**தேர்வு தகுதிகள்**

'மேரிட்' அடிப்படையில் மட்டுமே தேர்வுகள் நடைபெறும். SPDC <spdcindia.gov.in> என்ற அகப்பக்கத்தின் மூலம் விண்ணப்பிக்கப்படும் ஆன்லைன் விண்ணப்பங்கள் தேவையான ஆவணங்களோடு (ஸ்கேன் பிரதி) **அக்டோபர் 31, 2017குள்** சமர்ப்பிக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் பெயர் பட்டியல் வெளிவிவகார அமைச்சின் வலைத்தளத்தில் (**www.mea.gov.in**) வெளியிடப்படும். பெயர் பட்டியல் வெளியிட்டு **7 நாட்களுக்குள்** விண்ணப்பதாரர்கள் வெளிவிவகார அமைச்சுக்கு மின்னஞ்சல் மூலம் தங்களின் ஒப்புதலைத் தெரிவிக்க வேண்டும்.

புலம்பெயர்ந்த இந்திய மாணவர்களுக்கான கல்வி உபகார சம்பளத்தைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள கீழ்காணும் இந்திய தூதரக அகப்பத்தை நாடவும்.

https://www.indianhighcommission.com.my/Diaspora_Children_19_10.html

**********